Panel of Advocates.

* 194Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Panel of Advocates is to be set up for the State Undertakings in the State under the control of the Industries Department ; and

(*b*) if so, the details thereof ?

வழக்குரைஞர்கள் குழு.

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், தொழில் துறைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசு நிறுவனங்களுக்கு, வழக்குரைஞர்கள் குழு எதும் அமைக்கப்பட விருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேலவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Zari Production.

* 195 Q.—Thiru S. VELLAPANDIAN
Thiru L. BALARAMAN
Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total quantity of Zari to be produced by the Tamil Nadu Zari Limited, at Kancheepuram ; and

(*b*) the total investment made till date ?

@ 185-188 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சரிகை உற்பத்தி.

திரு. எஸ். வெள்ளபாண்டியன், and திரு. எல். பலராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காஞ்சீபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை உற்பத்தி லிமிடெட்டால் உற்பத்தி செய்யப்படவிருக்கும் சரிகையின் மொத்த அளவு யாது ?

(இ) இன்றைய நாள் வரையில் செய்யப்பட்ட மொத்த முதலீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆரம்பத்தில் மாதமொன்றுக்கு 1250 மார்க்குகள் (312·5 கிலோ கிராம்). படிப்படியாக மாதமொன்றுக்கு 10,000 மார்க்குகளுக்கு (2,500 கிலோ கிராம்) அதிகரிக்கப்படும்.

(இ) ரூபாய் ஏழு இலட்சம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டினுடைய தேவைக்கு சரிகை உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்ற குறிப்பு அமைச்சரவர்களிடம் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இல்லை.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இதற்கான முதலீடு எவ்வளவு, இது தங்க சரிகையா அல்லது வெள்ளி சரிகையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்; தலைவரவர்களே, சில்வர் கம்பியிலிருந்து செய்கிறார்கள். இதற்காக 7 இலட்ச ரூபாய் செலவழிக்கிறோம். பைலட் பிராஜக்டாக இதை ஆரம்பித்திருக்கிறோம். 25 இலட்ச ரூபாய் வரை வருமென்று கணக்கு இருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இது உள்நாட்டின் தேவையை எந்த அளவிற்குப் பூர்த்தி செய்கிறது? அடுத்த மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வழி இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சுமார் எட்டிலே ஒரு பங்கு நம்முடைய தேவையை இது பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குஜராத்தைப் பொறுத்தவரை இதைக் குடிசைத் தொழிலாகச் செய்கிறார்கள். நாம் இப்போதுதான் முதன்முதலாக பெரிய ஃபாக்டரி வைத்துச் செய்கிறோம். பின்னாலே தேவை முழுவதையும் உற்பத்தி செய்கிற அளவிற்கு இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, நமது மாநிலத்திலேயும் கிராமங்களில் இந்தத் தொழிலை ஏற்படுத்துவதற்கு, அங்குள்ள மக்களுக்கு பயிற்சி கொடுத்து இதைக் குடிசைத் தொழிலாக மாற்றுவதற்கு, அரசாங்கம் முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்போது நாம் ஒரு பெரிய திட்டத்தைப் போட்டு விட்டோம். குஜராத்தைப் பொறுத்த வரை இந்தத் தொழில் அங்கே பல ஆண்டுகளாக இயற்கையாகவே வளர்ந்திருக்கிறது. நாம் அப்படி திடீரென்று இங்கே அதைக் கொண்டு வருவோமானால், அந்த முயற்சி தோல்வியடையும். ஜாரி கிடைக்காத காரணத்தினால், காஞ்சீபுரம் பட்டுத் தொழிலுக்கு நெருக்கடி ஏற்படுகிறது. அதற்காக பெரிய தொழிலாக இதை நடத்துகிறோம். ஒரே இடத்தில் வைக்காமல் பரவலாக வைக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, இதனால் உடனடியாக எவ்வளவு தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சில பேர்கள் தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் எவ்வளவு பேர்கள் என்று சொல்ல முடியாது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இது முக்கியமான தொழில். சரிகைத் தொழிலை வைத்து பல நெசவுத் தொழில்கள் நடக்கவேண்டியிருக்கின்றன. இதை சென்ட்ரலைஸ் பண்ணி ஓரிடத்தில் செய்வது சரியல்ல. ஆகையினால், பல இடங்களில் தொழில் நடக்கிற மாதிரி சிறு குடிசைத் தொழிலாகப் பரவலான முறையில் நடப்பது நல்லதல்லவா ? ஒரே இடத்தில் என்று சொன்னால், தொழிலாளர்கள் பிரச்சினையில் தொழில் நின்றுவிட்டால், இதை நம்பியுள்ள தொழிலாளர்கள் அத்தனை பேருக்குமே வேலை பாதிக்கப்படுமல்லவா ? ஆகவே, இந்தத் தொழிலைப் பரவலாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆரம்பித்ததற்குப் பின்னாலே இந்த யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் இப்போது எடுத்துக் கொண்டிருப்பது, இந்த சில்வர் கம்பியை அப்படியே வாங்கிவிடுகிறோம் ; அதை கெமிகல் முறையில் கொடுத்து ஜாரி செய்கிற முயற்சிதான் இப்போது நடைபெறுகிறது. சிறிய அளவில்

1973 டிசம்பர் 4]

நடக்கிறது. பெரிய அளவில் உற்பத்தி செய்யும்போது, அங்கேயுள்ள மாதிரி, குஜராத் மாதிரி, வீட்டிற்கு வீடு செய்ய முடியுமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இருந்தாலும் இந்த யோசனையும் இறுதி முடிவு எடுக்கும்போது, எக்ஸ்பேண்ட் பண்ணும்போது கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, காஞ்சிபுரத்தில் மட்டும் இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான அடிப்படை நோக்க மென்ன? காஞ்சிபுரம் போன்று, ஆரணி மற்றும் வட ஆற்காடு மாவட்டச் சுற்றுப் புறங்களிலும் பட்டு நெசவாளர்கள் அதிகமாக இருப்பதனால், அங்கே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு வழிமுறையும், உத்தேசமும் அரசாங்கத்திற்கு உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, காஞ்சிபுரம் தான் பட்டுத் தொழிலுக்குப் பேர் போனது. ஆரணி போல தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் நெசவுத் தொழில் நடக்கிறது. ஆக, எல்லா இடங்களிலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியாது. காஞ்சிபுரத்திலும் நாம் இதை பைலட் பிராஜக்டாக ஆரம்பித்திருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, மதுரையில் பட்டுநூல்காரர்கள் என்று ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, மதுரையிலும் ஒரு கிளை உற்பத்திச் சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அவர்கள் பட்டு நூல் வாங்கி நெய்பவர்கள். இது ஜாரி மட்டும் உற்பத்தி செய்யும் தொழில். இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எல்லா நெசவாளர்களும் வாங்குகிறார்கள். அதுவும் அமைச்சரவர்கள் சொன்ன மாதிரி, குஜராத்தி லிருந்து வாங்குகிறார்கள். அந்தந்த சமயத்திற்குத் தகுந்தமாதிரி விற்ப தால், விலைகளை ஏற்றக்கூடிய நிலைமை இருக்கிறது ; சமயத்தில் கிடைக்காத நிலைமையும் இருக்கிற காரணத்தினால், நெய்ய முடியாத நிலைமை இருக் கிறது. இரண்டாவது, வெள்ளி சரிகை என்று சொன்னார்கள். கோல்ட் கண்ட்ரோல் ஆர்டர் காரணமாக, சில தொல்லைகள் இருக்கின்றன என் கிறார்கள். இந்தமாதிரி நெய்வதற்கு தங்கமும் தேவையாக இருக்கிற தென்று சொல்கிறார்கள். அது கிடைக்க நமக்கு வழி, வாய்ப்புகள் இருக்கிறதாவென்று தெரியவில்லை. வேறு மாநிலங்களை நம்பியில்லாமல் நாமே இந்தத் தொழிலை மிக நல்ல அளவிலே விருத்தியடையச் செய்தால், புடவைகளை நெய்வதற்கு நெசவாளர்களுக்குப் பயன் படுவதாக இருக்கும். ஆகவே, இது நல்ல முயற்சி, விரைவில் இதற்கு ஏதாவது வழி செய்யப் படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நான் முன்னாலே சொன்னபடி, இதற்காகத்தான் திட்டம் தயாரிக்கப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் நம்மோடு இருக்கிற காலத்தில் இதுபற்றி அவர்கள் யோசனை தெரிவித்தார்கள். ஜாரி கிடைக்காதபோது தொல்லைகள் ஏற்படு கின்றன! நாம் குஜராத்தை நம்பவேண்டியிருக்கிறது. இதற்கு மாற்றுத் திட்டமாகத்தான் இந்தத் தொழிற்சாலைக்குத் திட்டம் போட்டோம். உறுப் பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னமாதிரி, கோல்ட் கண்ட் ரோலில் உத்தரவு வாங்குவதற்கு சில ஆண்டுகள் ஆகிவிட்டன. நமக்கு குவார்டருக்கு 5.5 கிலோகிராம் கொடுத்திருக்கிறார்கள். பெரிய அளவிலே ஆரம்பிக்கும்போது, அதிகமான தங்கம் தேவைப்படும் என்று கருது கிறேன். வெள்ளிக் கம்பியைப் பொறுத்த அளவிற்கு அங்கே வாங்கி வந்து பயன்படுத்தலாம் என்ற முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதிலே இன்னொரு சங்கடம் ஏற்பட்டது. இது போன்ற பெரிய தொழிலாக உலகத்தில் எங்குமில்லை. ஆகவே இந்த இயந்திரம் கிடைக்கிறது என்பது பெரிய பிரச்சினையாக இருந்தது. குஜராத்தில் சிறு சிறு தொழில்களாக இருக்கின்றன. இந்தக் காரணத்தினால் அங்கே பெரிய இயந்திரங்களுக்குத் தேவையில்லாமல் இருக்கிறது. ரொம்ப நாட்களுக்கு முன்னால் பிரான்ஸ் நாட்டிலிருந்து பெங்களூரில் வாங்கிய இயந்திரத்தை நம்முடைய டெக்ஸ்டூல் கம்பெனியார் சென்று பார்த்து, அதையே எடுத்து வந்து போட்டிருக் கிறோம். இது சக்ஸஸ் ஆகும்போல் தோன்றுகிறது. நல்ல முறையில் நடக்குமென்று நம்புகிறோம். நம்முடைய நெசவாளர்களுக்கும் குவாலிடி யைப் பொறுத்த அளவிற்கு இதை உபயோகிக்கக் கூடிய ஒரு எண்ணம் ஏற்பட்டு விடுமானால், இதைப் பெரிய அளவில் ஏற்பாடு செய்யலாம்.

THIRU S. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, is the Hon. Minister aware that most of those establishments in Gujarat and Surat are proprietory establishments where individuals have invested their money both on machines and on raw material and, therefore, there are no complications for such decentralisation, and that if Government start decentralising here, they will be distributing very valuable and costly raw material which might dislocate these things ? As a centralised project, this is a very welcome project.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொருளாதார ரீதியில் எடுத்துச் சொன்னார்கள். முழுமையுமாக உற்பத்தி ஏற்படும்போது, இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளலாம். அதுவரையில் பிரித்து, தனித்தனியாகப் பல இடங்களில் வைப்பதற்கு வாய்ப்பு இல்லாதது போலத்தான் தோன்றுகிறது. பின்னால் பரிசீலித்துப் பார்க்கலாம் என்று தோன்றுகிறது.